

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு. தர்மராஜன் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவில் மாசிக்கொடை பெருந்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஒருங்கிணைப்பு கூட்டம், மண்டைக்காடு, சக்தி சாதனா மஹாலில் இன்று (20.02.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 130/2017 நாள்: 20.02.2017

**மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவில் மாசிக்கொடை பெருந்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, அரசு அலுவலர்களுடன் முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்து ஒருங்கிணைப்பு கூட்டம்**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.02.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்திப்பெற்ற திருக்கோவில்களுள் ஒன்றான பெண்களின் சபரிமலை என்றழைக்கப்படும் மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவில் மாசிக்கொடை பெருந்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு அரசுத்துறை அலுவலர்களுடன் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஒருங்கிணைப்பு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு. தர்மராஜன் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், மண்டைக்காடு, சக்தி சாதனா மஹாலில் இன்று (20.02.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவில் மாசிக்கொடை பெருந்திருவிழா 26.02.2017 - ஞாயிற்றுக்கிழமை திருக்கொடியேற்றுடன் தொடங்கி 10 தினங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது. 03.03.2017 வெள்ளிக்கிழமை அன்று வலியபடுக்கை விழாவும், 07.03.2017 செவ்வாய்க்கிழமை அன்று ஒடுக்கு பூஜை விழாவும், 14.03.2017 செவ்வாய்க்கிழமை அன்று எட்டாம் கொடை விழாவும் நடைபெற உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்லாமல் பிற மாவட்டங்களிலிருந்தும், அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலிருந்தும் பெருந்திரளான பக்தர்களும் விழாவில் கலந்து கொள்வார்கள்.

எனவே, திருவிழாவிற்கு வருகைதரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை மற்றும் அனைத்து வசதிகளும் முழுமையாக சம்பந்தப்பட்ட துறைகள் மேற்கொள்ள வேண்டும். திருவிழா காலத்தில் (26.02.2017 முதல் 07.03.2017 முடிய) எட்டாம் கொடை விழா மற்றும் மீனபரணி கொடைவிழா (30.03.2017 - வியாழக்கிழமை) நாட்களில் பக்தர்களுக்கு தேவையான பாதுகாப்பு வசதிகளை மாவட்ட காவல்துறை மூலம் மேற்கொள்ள வேண்டும். மேலும், திருவிழா காலங்களில் பக்தர்களுக்கு பேருந்து வசதிகளை அரசு போக்குவரத்துக்கழகம் மூலம் மேற்கொள்ளவும், சுகாதாரத்துறை அலுவலர்கள் சேவார்த்திகள் கூடும் இடங்களில் தேவையான சுகாதார வசதிகள் மற்றும் சுத்தமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் எனவும், பொதுப்பணித்துறை மூலம் திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளத்திற்கு தண்ணீர் வசதி தங்கு தடையின்றி கிடைக்கவும், பக்தர்கள் குளிப்பதற்கு ஏவிளம் சானல் சுத்தம் செய்து தண்ணீர் நிரப்பி வைத்திட வேண்டும் எனவும், மண்டைக்காடு பேரூராட்சி மூலம் வாகனங்கள் செல்லும் நான்கு வீதிகள் மற்றும் பேருந்துநிலையம் முதல் திருக்கோயில் வரையிலான சாலைகளை சீர் செய்திடவும், தெரு வீதிகளை சுத்தமாக பராமரித்திடவும், தற்காலிக கழிவறைகள் அமைத்து, அதற்கு தேவையான தண்ணீரை பீப்பாய்களில் வைத்திடவும்,

தட்டுபாடின்றி குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்திட மண்டைக்காடு பேரூராட்சி மூலம் மேற்கொள்ள வேண்டும் எனவும், மேலும், கடந்த ஆண்டை போல இவ்வாண்டும் விழா சிறப்பாக நடைபெற அனைத்து துறை அலுவலர்களும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. சாய் சரண் தேஜாசுவி இ.கா.ப., கோட்டாட்சியர்கள் திரு. ஆர்.ராஜ்குமார் (நாகர்கோவில்), திரு. இராஜேந்திரன் (பத்மநாபபுரம்), இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி. பாரதி, இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு. வசந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. பொ.இராஜேந்திரன், உதவி ஆணையர் (ஆயம்) திரு. காளிமுத்து, உதவி செயற்பொறியாளர் (மின்சார வாரியம்) திருமதி. பிரேமலதா, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. முத்துக்குமார், பொது மேலாளர் (அரசு போக்குவரத்துக்கழகம்) திரு. திருவம்பலம்பிள்ளை, உணவு பாதுகாப்பு அலுவலர் மரு. கருணாகரன், உதவி கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலைதுறை) திருமதி. எஸ். மலர்விழி, உதவி இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. நாபிராஜ், வட்டாட்சியர் திருமதி. புவனேஸ்வரி, செயல் அலுவலர்கள் திரு. சங்கர் கணேஷ் (மண்டைக்காடு), திரு. சுப்பிரமணியன் (கல்லுக்கூட்டம்), திருமதி. ஜெயமாலினி (திங்கள்நகர்), திருமதி. லிசி (மணவாளக்குறிச்சி) உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.